


நன்னிலம் சட்டமன்ற தொகுதி மஞ்சக்குடியில் நடைபெற்ற 'தமிழ்நாடு தலைகுனியாது' பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர், விளையாட்டு மேம்பாட்டு அணி மநில செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன்எம்.எல்.ஏ., ஒன்றியசெயலாளர்கள்வீ.அன்பரசன்,ப.பிரபாகரன்,கோ.தெட்சிணா மூர்த்தி,எஸ்.ஜோதிராமன்,கேப்டன்செல்வராஜ், வே.மனோகரன்,நகரசெயலாளர்கள் பக்கிரிசாமி, ஏ.கே.டி. சேரன், பேரளம்தியாகு,மகளிரணி ஷோபாகணேசன், ரேவதிசதீஷ், இளம் பேச்சாளர்கள் தினேஷ், தேவதீரன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி. கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, பிப். 28–

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர்–அமைச்சர் பி.கீதா ஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியாவின் மாபெரும் ஜனநாயக பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து தற்போது வரை சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் தொடர் வெற்றிகளை கழகத்திற்கு பெற்றுத் தந்ததுடன், கழக உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் காண்போர் வியக்கும் வகையில் உயர்த்தியிருக்கிறார்.

அவர் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றதில் இருந்து ”எல்லோருக்கும் எல்லாம் என்ற உயரிய தத்துவத்தின் அடிப்படையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், உலகத்திற்கே முன்மாதிரியாக விளங்கும் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம், பள்ளி மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள், கல்லூரி மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக விலையில்லா மடிக்கணினிகள், அன்புக் கரங்கள் திட்டம், தாயுமானவர் திட்டம், அன்புச்சோலை, பணி புரியும் மகளிர் நலனுக்காக தோழி விடுதிகள், உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கிக் கடன், கலைஞரின் கனவு இல்லம், மக்களைத் தேடி மருத்துவம், நம்மைக் காக்கும் 48 என எண்ணற்ற பல மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டு மக்களின் பொருளாதாரம் மேம்பாட்டுக்காகவும், இளைய தலைமுறையின் வளமான எதிர்காலத்திற்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்து, எதிர்க்கட்சியினரும் பாராட்டும் வகையில் திராவிட மாடல் பொற்கால ஆட்சியை நடத்தி வரும் திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாள் நாளை (மார்ச் 1ஆம் தேதி) கொண்டாடப்பட உள்ளது.

அன்றைய தினம் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழக அமைப்புகள் தோறும் கழக கொள்கை பாடல்களை ஒலிபரப்பியும், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

மேலும் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் கழகக் கொடிகளை புதுப்பிப்பது, புதிய கொடிகளை ஏற்றி வைப்பது, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்களில் அமைந்துள்ள படிப்பகங்களுக்கு பயனுள்ள புதிய புத்தகங்களை வழங்குவது, கழக முன்னோடிகளுக்கு சிறப்பு செய்வது என கட்சி வளர்ச்சிக்காகவும்,

சமுதாயத்தில் நலிந்த ஏழை எளிய மகளிர், முதியோர், ஆதரவற்றோர், திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது என கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை அவரவரால் இயன்ற நற்பணிகளை செய்து மக்கள் பயனுறும் வகையிலும் கொண்டாட வேண்டும் என கழக செயல்வீரர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




